# வரவு செலவுத் திட்ட உரை
# 2015

கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை.

கௌரவ தவிசாளர் அவர்களே,

கிழக்கு மாகாண சபையின் 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை இன்று இச்சபையின் முன் சமர்ப்பிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

''மஹிந்த சிந்தனை - அபிவிருத்திக்கான தூர நோக்கு'' என்ற தேசிய அபிவிருத்தி கொள்கை அதனுடன் இணைந்த நடுத்தர கால அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் ''கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டம்'' என்பவற்றை தழுவி தயாரிக்கப்படுகின்ற வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக கிழக்கு மாகாணமானது துரித அபிவிருத்திப்பிரதேசம் என்ற பெருமையுடன் மேலும் முன்னேறி சென்று உயர்மட்ட இலக்குகளை அடைய எத்தனித்துக் கொண்டிருக்கிறது.

இதற்கு தேசிய மட்டத்திலான வழிகாட்டல்கள், அனுசரணைகள் என்பவற்றுடன் எமது கடந்தகால நல்லாட்சி, பயனுறுதிமிக்க நிகழ்ச்சித் திட்டங்கள், அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் என்பன கணிசமான அளவில் பங்களிப்புச் செய்திருந்தமையை நினைவுகூர்வதுடன் எமது மாகாணம் மேலும் சுபீட்சமான நிலையை விரைவில் அடைந்து கொள்ளும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

## மாகாண அபிவிருத்தி

கிழக்கு மாகாணம் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் பல துறைகளிலும் அபிவிருத்தி அடைந்துவருவதனையிட்டு நாம் பெருமிதம் அடைகிறோம்.

எமது மாகாணம் உள்ளூர் மட்டத்தில் துரித வேகத்தில் விருத்தியடைந்துவருவதுடன் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் கணிசமான பங்களிப்பையும் வழங்கி வருகிறது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.3 வீத பங்களிப்பினை செலுத்தி மாகாண ரீதியில் 5ம் இடத்திற்கு முன்னேறியிருக்கின்றது. அதேநேரம், மாகாண மட்டத்திலான சமூக பொருளாதார குறிகாட்டிகளும் தேசிய குறிகாட்டிகளுக்கு அண்மித்த வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன.

அண்மைக் காலங்களில் எமது மாகாணத்தின் பிரத்தியேக தேவைகள், வளங்கள், ஆற்றல்கள் என்பவை சிறந்த முறையில்

உள்வாங்கப்பட்டு கிழக்கு மாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள் உத்வேகத்துடன் செயற்படுத்தப்பட்டு வந்தமை இதற்கு முக்கிய காரணமாகும். அத்துடன் இப்பெறுபேறுகளை அடைவதற்கு பல்வேறு வழிகளில் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்ற கௌரவ ஆளுநர், கௌரவ மாகாண சபை அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள், நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பங்களிப்பினை நினைவுகூர்வதுடன் எதிர்வரும் ஆண்டுகளிலும் இவை மேலும் வலுப்பெறும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

மாகாணத்தின் நீண்டகால அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ‘‘கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டம்’’ மற்றும் ‘‘ஐந்து ஆண்டுகால நிறுவன பெறுபேற்று உருவமைப்பு’’ என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாண சபையின் அனைத்து துறைசார் அபிவிருத்தி செயற்பாடுகளும் வகுக்கப்பட்ட இலக்குகளை நோக்கி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

## நிதி ஒதுக்கீடு

2015 ஆம் ஆண்டிற்காக நிதி ஆணைக்குழுவினால் கிழக்கு மாகாண சபைக்கு மீண்டெழும் செலவினங்களிற்கென 16,465 மில்லியன் ரூபாவும் மூலதனச் செலவினங்களிற்கென 2,869 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த மூலதனச் செலவில் 1,279 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதியளிப்புகளுடனான விஷேட கருத்திட்டங்களின் அமுலாக்கத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 2014 நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவு 1,455 மில்லியன் ரூபாவினாலும் மாகாண சபைக்கான மூலதனக் கொடை 250 மில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளது.

மீண்டெழும் செலவினங்களுக்கான நிதியீட்டமாக மத்திய அரசின் மானியம் 13,750 மில்லியன் ரூபாவும் அரச வருமான சேகரிப்பு 2,715 மில்லியன் ரூபாவும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அரச வருமான சேகரிப்பு என்பதில் எமது மாகாண சபையின் வருமான சேகரிப்பு 740 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த மூலதனச் செலவில் 54 வீதம் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் 13 வீதம் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் 09 வீதம் உற்பத்தி துறையிலும் 05 வீதம்

உள்ளூராட்சி சேவைகளிலும் முதலீடு செய்யப்படவுள்ளதுடன் மாகாண நிர்வாக நிறுவன மேம்பாட்டிற்கு 10 வீதமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் விஷேட திட்டங்களாக, சமமான பிராந்திய அபிவிருத்தியினை நிலைநிறுத்தும் நோக்குடன் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறிய கைத்தொழில் பேட்டைகள் அமைக்கும் திட்டத்தின் தொடர் வேலைகளிற்காக 76 மில்லியன் ரூபா அடுத்த வருடத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்தும் விவசாய சிறுகைத்தொழில் அமைச்சின் மேற்பார்வையுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் அடுத்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக 60 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான வேலைத்திட்டங்கள் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு கௌரவ மாகாணசபை உறுப்பினர்களுக்கு தலா 03 மில்லியன் ரூபா என்ற வகையில் மொத்தமாக 111 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டை மக்களிற்கு பயனுள்ள வகையில் பொருத்தமான வேலைத்திட்டங்களை தெரிவு செய்து மாகாண அபிவிருத்திக்கு மேலும் வலுச்சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தி கொள்கைகளிற்கு அமைவாக அபிவிருத்தி முதலீடுகளும் அவற்றின் நன்மைகளும் அனைத்து பிரதேசங்களிலும் சகல இன மக்களையும் சென்றடைவதை உறுதி செய்து கொள்வது எமது கடமையாகும். அதே நேரம் அனைத்து துறைகளிலும் சகல செயற்பாடுகளிலும் பிராந்திய, இன ரீதியான சமநிலை தொடர்ந்து பேணப்படுவதுடன் இனங்காணப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவதையும் நாம் உறுதி செய்து கொள்வோம்.

அபிவிருத்தியை மேலும் விரைவுபடுத்தும் பொருட்டு பொருத்தமான துறைகளில் அரச - தனியார் துறை பங்குபற்றுதலினூடாக வினைத்திறனான திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களிற்கு பயன்மிக்க பெறுபேறுகள் கிடைக்கப்பெறுவது தொடர்பான ஒழுங்கமைப்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான அபிவிருத்தி உபாயங்களினூடாக பௌதீக வளங்களையும் மக்களின்

ஆற்றலையும் பயன்படுத்தி தொழில் துறைகளை விருத்தி செய்து உற்பத்தி அதிகரிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், வருமான உயர்வு என்பவற்றின் வாயிலாக எமது மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படுவது எமது குறிக்கோளாக அமையும்.

எமது அபிவிருத்தி கொள்கைகள், உபாயங்கள், முன்னுரிமைத் திட்டங்கள் என்பன ஒரு சிறந்த பொறிமுறையினூடாக முழுமையாகவும் வினைத்திறனுடனும் நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

## உற்பத்தித்துறை

தவிசாளர் அவர்களே,

எமது மாகாணப் பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்வாதாரத்திலும் விவசாயத்துறை பெரும் பங்கினைக் கொண்டிருப்பதுடன் நாட்டின் மொத்த உற்பத்தியிலும் கிழக்கு மாகாணம் கணிசமான பங்களிப்பினை வழங்கி வருகிறது. அத்துடன் கைத்தொழிற் துறை என்பது வளர்ச்சிபெறுகின்ற ஒரு துறையாகவும் அதற்குரித்தான சாத்தியமான வளங்களையும் ஆற்றல்களையும் கொண்ட பிரதேசமாக எமது மாகாணம் விளங்குகிறது.

கிழக்கு மாகாணத்தில் நெற்பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலப்பரப்பு முற்றுமுழுதாக பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் மொத்த நெல் உற்பத்தி 2013 ஆம் ஆண்டில் 1.071 மில்லியன் மெற்றிக் தொன் ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் ஏனைய உணவு பயிர் உற்பத்தி 97,000 மெற்றிக் தொன் ஆகவும் பாலுற்பத்தி 74 மில்லியன் லீற்றர் ஆகவும் அதிகரித்துள்ளது.

எமது மாகாணத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றபோதும் அவற்றின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கும் சிறந்த சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதனூடாக பால் மற்றும் பண்ணை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து அதனை ஒரு இலாபகரமான துறையாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

விவசாயம் கைத்தொழில் போன்ற உற்பத்தித் துறைகளை மேலும் விருத்தி செய்வதற்கும் இத்துறையிலுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்குமான உபாயங்களை

வகுத்து பொருத்தமான நடவடிக்கைகள் எமது நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்படும். இத்துறைகளில் பெரும்பாலும் ஜீவனோபாய தொழில்களாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதார அணுகுமுறையுடன் பயன்மிக்க வாணிப முயற்சிகளாக மாற்றம் பெற வேண்டும். எமது மாகாண உற்பத்திகளிற்கு பெறுமதி சேர் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி வியாபார ரீதியான முயற்சிகளை ஊக்குவிப்பதிலும் சந்தைப்படுத்தல் பொறிமுறையை வலுப்படுத்துவதிலும் விஷேட கவனம் செலுத்தவுள்ளோம்.

விவசாயத்துறை மேம்பாட்டிற்காகவும் அதற்கான இலக்குகள் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டும் விவசாயத்துறை உட்கட்டமைப்பு என்ற கருதுகோளிற்கு அமைவாக அவசியமான விவசாய வீதிகள் மேம்படுத்தப்படுவதுடன் நீர்ப்பாசனத்துறையில் விருத்தியும் விரிவாக்கமும் மேற்கொள்ளப்படும்.

மீன்பிடி வளங்களை போதியளவில் கொண்ட எமது மாகாணம் 2013 இல் 9,710 மெற்றிக் தொன் மீன் உற்பத்தி என்ற இலக்கை அடைந்திருந்தது. எனினும் கிடைக்கத்தக்க வளங்களுடன் ஒப்பிடுகையில் மீன் உற்பத்தியும் அதனோடு இணைந்த நடவடிக்கைகளும் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. நவீன தொழிநுட்பத்துடன் கூடிய வினைத்திறனான மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் என்பனவற்றுடன் பெறுமதி சேர் செயற்பாடுகள் மற்றும் ஏற்றுமதி வியாபாரம் என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். வாழ்வாதார தொழில்கள் என்றவகையில் வறிய மீனவர்களிற்கு உள்ளீட்டு உதவிகள் வழங்கும் திட்டங்கள் மற்றும் சிறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

எமது மாகாணத்தின் உள்ளூர் வளங்கள், மக்களின் தொழிற்திறன் ஆற்றல்கள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பவற்றை மையப்படுத்தி புதிய நுட்பங்களுடன் சிறு கைத்தொழில் துறையினை விருத்தி செய்வதன் மூலம் உள்ளூர் வளங்களை சரியான வகையில் பயன்படுத்தி கிராமிய வேலைவாய்ப்புகளை அதிகரித்து வறிய மக்களிற்கு நிலையான குடும்ப வருமானத்தினை உருவாக்கிக் கொடுக்கும் வகையில் நிகழ்சித்திட்டங்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை என்பது போதிய வளங்களுடன் துரிதமாக வளர்ச்சி கண்டுவரும் அதேவேளை அதனுடன் தொடர்புடைய தொழில்கள் சேவைகளுடன் இணைந்த வகையிலும் தனியார் துறையின் பங்களிப்புடனும் இத்துறையினை

ஒரு உன்னத நிலைக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதற்கு இனங்காணப்பட்ட சாத்தியமான இடங்களில் சிறிய நடுத்தர உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்களையும் ஆதார சேவைகள், சந்தைப்படுத்தல் வசதிகளையும் மாகாண நிதி திட்டங்களாக தொடர்ந்து நடைமுறைப்படுத்த உள்ளோம். அத்தோடு எமது மாகாணத்தில் சுற்றுலாத்துறையை சிறந்த வருமானம் ஈட்டுகின்ற ஒரு துறையாக மாற்றியமைக்க வழிசமைப்போம்.
உணவுக்களஞ்சியமான எமது மாகாணத்தில் பொருளாதாரத்தின் முதுகெலும்பான உற்பத்தித்துறையினை மேலும் வலுப்படுத்தி அதனூடாக சமூக அபிவிருத்தி அடைந்து கொள்வதை இலக்காக கொண்டு நாம் செயலாற்ற வேண்டும். அதற்கான உபாயங்களும் செயற்பாடுகளும் சம்பந்தப்பட்ட மாகாண திணைக்களங்களினது நிகழ்ச்சித்திட்டங்களில் உள்வாங்கப்பட்டு செயலுருப்பெற வேண்டும்.

உற்பத்தித் துறை விருத்திக்கான நிகழ்ச்சி திட்டங்களையும் புதிய செயற்பாடுகளையும் உரிய திணைக்களங்களினூடாக முன்னெடுப்பதற்கென அடுத்த ஆண்டில் மொத்தமாக 263 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக மாகாண நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்

கடந்த வருடங்களில் எமது மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலும் சிறிய பெரிய அளவிலான பொருளாதார உட்கட்டமைப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபையினாலும் தேசிய நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தி நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இதன்கீழ் நெடுஞ்சாலைகள் பாலங்கள் மற்றும் மாகாண, கிராமிய வீதிகள் இணைந்த வீதி வலையமைப்பு மேம்படுத்தப்பட்டிருப்பதுடன் மின்சார வசதிகள், நீர்வழங்கல், தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்துச் சேவைகள் என்பனவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மேலும் மாகாண மக்களின் அடிப்படை வாழ்வாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும், வீடமைப்புத் துறையை மேம்படுத்தும் நோக்குடனும் ஒரு தனியான நிறுவனத்தின் அவசியத்தை உணர்ந்து கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை உருவாக்கப்பட்டு இயங்கிவருகிறது. இது விரிவாக்கப்பட்ட சேவைகள் மூலம் வினைத்திறனுடன் இயங்கி மாகாண அபிவிருத்தியில் வீடமைப்பு நடவடிக்கைகளில் மேலும் பங்களிப்பினை மேற்கொள்ளவுள்ளது.

இத்தகைய உட்கட்டுமாண விருத்திகள் பிராந்திய சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலியதுடன் அதன் பலாபலன்களை எமது மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அபிவிருத்தி முன்னேற்ற குறிகாட்டிகளை நோக்குகையில் உட்கட்டமைப்புத்துறையில் மேலும் முதலீடுகளும் திட்ட நடவடிக்கைகளும் வேண்டப்படுகின்றன. அவற்றை நிறைவு செய்வதில் எமது மாகாண சபை தொடர்ந்தும் அர்பணிப்புடன் ஈடுபடும்.

பொருளாதார உட்கட்டமைப்பு திட்டங்களில் மத்திய அரசினதும் வெளிநாட்டு நிதியுதவியுடனான செயற்திட்டங்களிலிருந்தும் பெருமளவு முதலீடுகள் உள்வாங்கப்படுகின்றன. அடுத்துவரும் ஆண்டுகளில் அவ்வாறான அபிவிருத்தி முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதிலும் பயன்மிக்க திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதிலும் தீவிர கவனம் செலுத்துவோம். அதேநேரம் அபிவிருத்திக்கென கிடைக்கின்ற மாகாண நிதியினை பயன்படுத்துவதில் பரந்துபட்ட வகையில் முன்னரிமைத் தெரிவுகளுடன் கூடிய சிறந்த நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்து மக்கள் மேலும் பயனுறும் வகையில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

பல உபதுறைகளையும் உள்ளடக்கி 2015 ஆம் ஆண்டிற்கென பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திகளிற்காக 379 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக மாகாண திணைக்களங்களிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## சமூக உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும்

தவிசாளர் அவர்களே,

எமது மாகாண சபை கட்டமைப்பிலும் அதன் நிதி, நிர்வாக, அபிவிருத்தி செயற்பாடுகளிலும் கல்வி மற்றும் சுகாதாரம் என்பவற்றை உள்ளடக்கிய சமூக உட்கட்டமைப்பு வசதிகள், சேவைகள் என்ற வகுதியே பெரும்பங்கினை கொண்டுள்ளது. இவ்விரு பிரதான துறைகளிலும் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி முதலீடுகள், சேவைகளின் விரிவாக்கம், ஆளணி விஸ்தரிப்பு, நவீன தொழில் முறைகளின் அறிமுகம் என்பவை காரணமாக மனித வள அபிவிருத்தியில் சிறந்த ஒரு நிலைக்கு அண்மித்துள்ளோம்.

கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளின் அபிவிருத்தி முதலீடு என்பது தனியே மூலதன செலவினமாக மட்டுமன்றி பெரும்பகுதி சேவைகள் வழங்கல் என்ற வகையில் மீண்டெழும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக அமைகிறது. கல்வி மற்றும் சுதேச மருத்துவம் அடங்கலான சுகாதாரம் ஆகிய இரு துறைகளிற்குமென அடுத்த ஆண்டிற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையில் 454 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இத்துறைகளின் கீழ் வரும் விஷேட கருத்திட்டங்களையும் ஏனைய உபதுறைகளையும் உள்ளடக்கிய வகையில் சமூக உட்கட்டமைப்பு வசதிகளிற்கும் சேவைகளிற்குமென 1,538 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக மாகாண திணைக்களங்களிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதானமாக கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளின் கீழ் கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டு இன்னும் முடிவுறுத்தப்படாத நிலையில் பல எண்ணிக்கையிலான கட்டடங்கள் காணப்படுவதுடன் இவற்றிற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை ஒதுக்கீட்டில் உரிய திணைக்களங்களினால் முன்னுரிமை அடிப்படையில் போதிய நிதி ஒதுக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட கட்டடங்களாக விரைவில் மக்களினதும் மாணவர்களினதும் பாவனைக்கு கையளிக்கப்பட வேண்டும்.

இதே நடவடிக்கைகள் ஏனைய துறைகளிலும் அடுத்த ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களில் முன்னுரிமையளிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதுடன் இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு துறைசார் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதே ஆண்டுகளில் முடிவுறுத்தி அவை முழுமையான பாவனைக்குரியதாக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் சுகாதாரம், விளையாட்டு, தகவல் தொழிநுட்பம், கற்பித்தல் திறன் மற்றும் கல்வி முகாமைத்துவம் என்பவற்றிலும் உரிய அளவுகளில் கவனம் செலுத்தி ஒருங்கிணைந்த அபிவிருத்தியினை அடையும் வகையில் கல்வித்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

அதற்கேற்ற வகையில் கல்வித்துறை அபிவிருத்திக்கென அடுத்த ஆண்டில் 208 மில்லியன் ரூபா மாகாண அபிவிருத்தி கொடையிலிருந்தும் 397 மில்லியன் ரூபா விஷேட கருத்திட்ட நிதியிலிருந்தும் ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாக்கும் முகமாக மாகாண கலாசார நூதன சாலையும் புதிதாக தாபிக்கப்படவுள்ளது.

மாகாண சுகாதார துறை குறிகாட்டிகள் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுமளவிற்கு மிகச்சிறப்பாக காணப்படுகின்றது. மேலும் எமது மக்களிற்கு தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் ஆரோக்கியமான சமூகத்தை நிலைநிறுத்தவும் நிறுவன ரீதியான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சுகாதார சேவைகளை விஸ்தரிப்பதனூடாக பொருத்தமான நடவடிக்கைகள் நிகழ்ச்சிதிட்டங்களில் உள்வாங்கப்படும். சகல பிரதேசங்களிலும் அனைவருக்கும் தரமான சுகாதார சேவை வசதிகள் இலகுவாக கிடைப்பதனை உறுதி செய்துகொள்வது எமது தலையாய கடமையாகும்.

எனவே உயர்தர சுகாதார வசதிகள் சேவைகள் சகல மக்களிற்கும் இடையறாது வழங்கப்படவதை இலக்காகக்கொண்டு மேலைத்தேய மற்றும் சுதேச மருத்துவ துறைகளிடையே சிறந்த இணைப்புத்தன்மையை பேணி நிகழ்ச்சிதிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் சுகாதார சேவை வழங்கலில் தனியார் துறையின் பங்களிப்பு ஊக்குவிக்கப்படும்.

சுகாதாரத்துறை அபிவிருத்திக்கென அடுத்த ஆண்டில் மாகாண அபிவிருத்தி கொடையிலிருந்து 246 மில்லியன் ரூபாவும் விஷேட கருத்திட்டங்களிலிருந்து 595 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு மற்றும் நலிவுற்றோர் நலன்புரி நடவடிக்கைகள் என்பன சமூக சேவை செயற்திட்டங்களினூடாகவும் நலச்சேவை வசதிகளினூடாகவும் சிறந்த முறையில் வடிவமைத்து செயற்படுத்தப்பட்டு வருவதுடன் விளையாட்டுதுறை மேம்பாட்டினூடாக ஆரோக்கியத்தையும் நற்பண்புகளையும் விருத்தி செய்து ஒழுக்கமுடைய பிரஜைகளையும் ஆரோக்கியமான சமூகத்தினையும் உருவாக்குவதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

## விஷேட செயற்திட்டங்கள்

மாகாண சபை நிதியீட்டத்துடனான நிகழ்ச்சி திட்டங்களிற்கு மேலதிகமாக மத்திய அரச நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியுதவியுடனான விஷேட கருத்திட்டங்கள் என்பன தொடர்பாக இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது என நான் நம்புகின்றேன்.

அண்மைக்காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வெளிநாட்டு நிதியுதவியுடனான விஷேட திட்டங்களில் அனேகமானவை இவ்வாண்டில் முடிவுறுத்தப்பட்டுள்ளமையால் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது அடுத்த வருடத்திற்கான விஷேட கருத்திட்டங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. புதிய கருத்திட்டங்கள் மற்றும் வருமானத்தை உழைக்கக் கூடிய நிறுவனங்களை உருவாக்கி செயற்படுத்துதல் என்பவற்றிற்கான நிதியீட்டங்களை தேடிப்பெறவேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் (2nd HSDP) அடுத்த ஆண்டில் 355 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.
தற்போது உலக வங்கி, அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கும் பாடசாலைக் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கென 397 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிதியுதவியுடன் அடிப்படை சமூகசேவை உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்திற்கென 240 மில்லியன் ரூபாவும் உலக வங்கியின் நிதியளிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் மாகாண வீதி அபிவிருத்தித் திட்டத்திற்கென 267 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சியும் கிராம அபிவிருத்தியும்

எமது மாகாண சபைக் கட்டமைப்பின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக உள்ளூராட்சி வீதிகள், கிராமியச் சந்தைகள், நீர் வழங்கல் போன்ற கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவம் போன்ற உள்ளூராட்சி சேவைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வறுமைக் குறிகாட்டிகளின் அடிப்படையில் பரந்துபட்ட வகையில் அடையாளங்காணப்பட்ட மிக வறிய கிராமங்களில் சிறியளவிலான சமூக உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 19 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவை யாவற்றையும் உள்ளடக்கிய வகையில் உள்ளூராட்சித்துறை மற்றும் கிராமிய அபிவிருத்திக்கென அடுத்த ஆண்டிற்கு மாகாண அபிவிருத்திக் கொடையில் 148 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## நல்லாட்சியும் நிறுவன அபிவிருத்தியும்

சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்ற எமது கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன இன நல்லுறவை மென்மேலும் வளர்த்துக் கொள்வதாக அமையும்.

இவற்றில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு எம் அனைவருக்கும் உண்டு என்பதுடன் சமத்துவம் உறுதி செய்யப்படுவதோடு அபிவிருத்தி மற்றும் நடவடிக்கைகளில் பிராந்திய அபிவிருத்தி, இன நல்லிணக்கம் மற்றும் துறைசார் வளர்ச்சி என்பவற்றிற்கிடையே சமநிலை பேணப்படும். இதற்கு பொருத்தமான நடைமுறைகளினை வகுத்து உரிய திணைக்களங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளின் போது மாவட்ட மட்டத்தில் சமநிலை பேணப்படுவது போன்று மாவட்டங்களின் உள்ளேயும் ஏற்றத்தாழ்வுகள் களையப்படுவதற்கு அனைத்து மட்டத்திலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு அனைவரினதும் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்பதுடன் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நலன்கள், தேவைகளில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

நல்லாட்சியை நிலைநிறுத்தும் பொருட்டு எதிர்காலத்தில் கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சி மன்றங்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே!

கிழக்கு மாகாண சபைக்கென 2015 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ் வரவு செலவுத்திட்டத்தினூடாக கிழக்கு மாகாண மக்களின் வளர்ச்சி, நலன் என்பவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு சிறந்த நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு கௌரவ அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டிக்கொண்டு இவ்வுரையை செவிமடுத்த தங்கள் எல்லோருக்கும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்

# கிழக்கு மாகாண வரவு செலவுத் திட்டம் - 2015

| விபரங்கள் | தொகை (மில். ரூபா) |
|---|---|
| **1. நிதியீட்டம்** | |
| **1.1 மீண்டுவரும் செலவீனங்களுக்கான நிதி மூலம்** | **16,465** |
| *1.1.1 மத்திய அரசினால் வழங்கப்படவிருக்கின்ற தொகுதி மானியம்* | 13,750 |
| *1.1.2 எதிர்பார்க்கப்படும் அரச வருமான சேகரிப்பு* | |
| *மத்திய அரசு வருமான சேகரிப்பு* | 1,975 |
| *மாகாண வருமான சேகரிப்பு* | 740 |
| **1.2 மூலதனச் செலவீனங்களுக்கான நிதி மூலம்** | **2,869** |
| *1.2.1 பிரமாண அடிப்படையிலான கொடை* | 400 |
| *1.2.2 மாகாண துறைசார் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை* | 1,190 |
| *1.2.3 விசேட கருத்திட்டங்களுக்கான நிதியளிப்பு* | 1,279 |
| **மொத்த நிதியீட்டம்** | **19,334** |
| **2. உத்தேச நிதி பயன்பாடு** | |
| **2.1 மீண்டுவரும் செலவீனங்கள்** | **16,465** |
| *2.1.1 ஆளுக்குரிய வேதனங்கள்* | 12,762 |
| *2.1.2 பிரயாணச் செலவுகள்* | 182 |
| *2.1.3 வழங்கல்கள்* | 472 |
| *2.1.4 பராமரிப்பு மற்றும் ஒப்பந்த சேவைகள்* | 1,091 |
| *2.1.5 மாற்றல்கள்* | 1,720 |
| *2.1.6 கொடைகள், மானியங்கள் மற்றும் ஏனையவை* | 238 |
| **2.2 மூலதனச் செலவீனங்கள்** | **2,869** |
| *2.2.1 கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் அபிவிருத்தித் திட்டங்கள்* | 111 |
| *2.2.2 நிறுவன அபிவிருத்தயும் மாகாண நிர்வாகமும்* | 289 |
| *2.2.3 துறைசார் அபிவிருத்தி செயற்திட்டங்கள்* | |
| - *பொருளாதார உட்கட்டமைப்பு* | 379 |
| - *சமூக உட்கட்டமைப்பு* | 1,538 |
| - *உற்பத்தித்துறை (விவசாயமும் கைத்தொழிலும்)* | 263 |
| - *உள்ளூராட்சியும் வசதிகள் சேவைகளும்* | 153 |
| - *சமமான பிராந்திய அபிவிருத்தி திட்டம்* | 76 |
| - *கிராம அபிவிருத்தி திட்டம்* | 60 |
| **மொத்த நிதி பயன்பாடு** | **19,334** |